செ.வெ.எண்:64/ஜூன் நாள்:25.06.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் மூலம் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில்**

**மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள்,**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருவுற்ற தாய்மார்களை வாழ்த்தி ஆசி வழங்கினார்கள்.**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வலம்புரி மஹாலில் இன்று (25.06.2016) சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை சார்பாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் மூலம் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோ் கலந்துகொண்டு கருவுற்ற தாய்மார்களை வாழ்த்தி ஆசி வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசியதாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்கள் நலனை மேம்படுத்திடும் விதமாக எண்ணற்ற மக்கள் நல மேம்பாட்டுத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்தம் பாதுகாப்பினை மேம்படுத்திடும் வகையிலும் பல்வேறு மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறார்கள். மகப்பேறு காலம் என்பது பெண்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான காலகட்டமாகும். மகப்பேறு காலத்தின்போது பெண்கள் தங்களது உள்ளத்தையும், உடல் நலத்தினையும் ஆரோக்கியமாக பாதுகாத்திட வேண்டும். உரிய நேரங்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தேவையான மாத்திரைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுதவிர, சத்தான உணவுகளையும் உட்கொள்ள வேண்டும். மருத்துவர்களின் பரிந்துரையில்லாமல் பிறரது ஆலோசனைகளின்பேரில் தாங்களாகவே மருந்து எடுத்துக்கொள்வது தவறான விளைவுகளை ஏற்படுத்திடும் சூழ்நிலை உண்டாக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கருவுற்ற தாய்மார்கள் பயன்பெறும் வகையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் கருவுற்ற தாய்மார்களுக்கு மூன்று கட்டங்களாக தலா ரூ.4000/- வீதம் மொத்தம் ரூ.12000/- வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித்தொகையினை ரூ.18,000/-மாக உயர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளில் கருவுற்ற தாய்மார்களுக்கான மருத்துவ பரிசோதனைகள், ஸ்கேனிங் வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விழாவில் கலந்துகொண்டுள்ள கருவுற்ற தாய்மார்கள் அனைவரும் உரிய காலங்களில் தேவையான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு தாங்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகளை சமுதாயத்தில் சிறந்த குடிமக்களாக உருவாக்கிட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா எம்.பி., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.முத்தையா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.கிருஷ்ணவேணி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சி.குணசேகரி, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சாந்தி சாத்தையா, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திரு.ஜி.முனியசாமி, உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கருவுற்ற தாய்மார்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**